www.Padasalai.Net www.TrbTnpsc.com

KK11T

கன்னியாகுமரி மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2024

-----

வகுப்பு 11

கால அளவு: 3.00 மணிநேரம் **பொதுத்தமிழ்** மதிப்பெண்கள்: 90

பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** **14×1=14**

1) ''கபாடபுரங்களைக் காவுகொண்ட பின்னும் காலத்தால் சாகாத தொல்காப்பியங்கள்'' - அடிமோனையைத் தெரிவு செய்க.

அ) கபாடபுரங்களை - காவுகொண்ட ஆ) காலத்தால் - கனிமங்களை

இ) கபாடபுரங்களை - காலத்தால் ஈ) காலத்தால் - சாகாத

2) 'வான் பொய்த்தது'' - என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப் பொருள்

அ) வானம் இடிந்தது ஆ) மழைபெய்யவில்லை

இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது

3) யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்? இது எவர் மொழி?

அ) வாய்க்கால் ஆ) நாங்கூழ் இ) நடராசன் ஈ) புல்

4) துன்பப்படுபவர் .............

அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர்

இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர்

5) பாரதி, சிவப்பு வண்ணத்தாளில் வெளியிட்ட இதழ்

அ) விஜயா ஆ) இந்தியா இ) சுதேசமித்திரன் ஈ) கர்மயோகி

6) மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து ............. நினை.

அ) முகக்குறிப்பை அறிந்தவரை ஆ) எண்ணியதை எண்ணியவரை

இ) மறதியால் கெட்டவர்களை ஈ) சொல்லேர் உழவரை

7) 9 அடி சிற்றெல்லையும், 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்

அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு

8) இன்குலாபின் கவிதைகள், முழுமையாக ............. என்னும் பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன.

அ) உயிர்த்தெழும் காலத்துக்காக

ஆ) கனவுகள்+கற்பனைகள் = காகிதங்கள்

இ) ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்

ஈ) கூவும் குயிலும் கரையும் காகமும்

9) ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது?

அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு

இ) தலைமைத் துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

10) 'ஜனப் பிரளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்கு உரிய தமிழ்ச்சொல்

அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை

11) 'ழ' என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாமால் வெளியிடப்பட்டது 'கவிதைக் கிரீடம்' என்று போற்றப்படுவது

அ) சிற்றிதழ், குற்றாலக் குறவஞ்சி ஆ) கவிதை நூல், திருச்சாழல்

இ) நாளிதழ், நன்னகர் வெண்பா ஈ) கட்டுரை நூல், குற்றாலக்கோவை

12) வேற்றுநிலை மெய்ம்மயக்கத்திற்கு உரிய மெய்யெழுத்துகள் எவை?

அ) ச், த், ப் ஆ) ர், ழ் இ) ய், ர், ழ் ஈ) க், ச், த், ப்

13) தொல்காப்பியர் சுட்டும் பள்ளு இலக்கிய வகை யாது?

அ) விருந்து ஆ) உழத்திப்பாட்டு இ) புலன் ஈ) வனப்பு

14) மனித இனத்தின் ஆதி அடையாளம்

அ) எழுத்து ஆ) பேச்சு இ) மொழி ஈ) பாட்டு

Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக:** **3×2=6**

15) "ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின" - தொடரின் பொருள் யாது?

16) மருத்துவத்தின் பிரிவுகளாகக் குறள் கூறுவன யாவை?

17) தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?

18) செந்துறைப் பாடாண்பாட்டு - துறை விளக்கம் எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **2×2=4**

19) இந்தியக் கட்டடக்கலையின் மூன்று வகைகள் யாவை?

20) சங்க காலத்தில் தமிழ்மொழியின் நிலை பற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?

21) மதிப்புக்கூட்டுப் பொருள்கள் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக:** **7×2=14**

22) மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?

23) **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக:**

அ) புகழெனின் ஆ) பூஞ்சோலை

24) **இலக்கணக்குறிப்பு எழுதுக: (ஒன்றனுக்கு)**

அ) அறிதல் ஆ) உடை அணிந்தேன்

25) **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக:**

அ) மலிந்த ஆ) ஆழ்க

26) 'எதிர் நீச்சல்' என்னும் மரபுச் சொல்லைத் தொடரில் அமைத்து எழுதுக.

27) உள்ளுறை உவமம் என்றால் என்ன?

28) **பின்வரும் மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:**

கலை, களை, கழை

29) **நிறுத்தற் குறியிடுக:**

அறம் பொருள் இன்பம் வீடு என வாழ்க்கைப் பேறு நான்கு

30) **அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதியைக் கொண்டு விடுகதைக்குரிய ஆக்கப்பெயரை எழுதுக:**

வேவு பார்த்திடுவான்; ஓசையின்றிச் சென்றிடுவான் (ஆளி)

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **2×4=8**

31) வடகரை நாட்டின் இயற்கை வளங்களைக் குறிப்பிடுக.

32) உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள் - **இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

33) குறிப்பறிதல் - குறள் வழி விளக்குக.

34) சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **2×4=8**

35) மாடித் தோட்டம் நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.

36) சமணப்பள்ளிகள் பற்றிக் குறிப்பு வரைக.

37) ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.

38) ஃப்ரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?

www.Padasalai.Net

SHOT ON MI 10T PRO

Scanned with CamScanner

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்கவும்:** **3×4=12**

39) உவமை அணி **(அல்லது)** சொற்பொருள் பின்வருநிலையணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

40) **இலக்கிய நயம் பாராட்டுக: (மையக் கருத்துடன் எவையேனும் மூன்று நயங்கள் மட்டும்)**

சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
பணத்தால் அதைவிடக் கீழன்றோ?
இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்திரம் இருந்தால் தான்
நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட
நிச்சயம் சுதந்திரம் அது வேண்டும்.

**- நாமக்கல் கவிஞர்**

41) ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் தருக.

42) **தமிழாக்கம் தருக:**

1. The weak can never forgive. Forgiveness is the attribute of the strong.
2. The pen is mighter than the sword.
3. Nobody can hurt me without my permission.
4. Education is the most powerful weapon. Which you can use to change the world.

42) **செவி மாற்றுத் திறனாளிகளுக்கான மாற்றுவினா:**

தமிழ்மொழியில் மறந்ததும் மறைந்ததுமான சிறந்த செய்திகள் அளவுகடந்து உள்ளன. அவற்றை வெளிக்கொணர்ந்து, வீரிய உணர்வுடன் வெளியிட்டவர் அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி ஆவார். அவர் எழுதிய கட்டுரைகள் அனைத்தும் புதிய புதிய செய்திகளைப் புலப்படுத்திய விந்தைப் படைப்புகள். இராமேசுவரத்தீவு, உறையூர் அழிந்த வரலாறு, மறைந்துபோன மருங்காப்பட்டினம் போன்ற தனித்தன்மை கொண்ட அவர்தம் கட்டுரைகள் வரலாற்றில் புதிய வெளிச்சம் பாய்ச்சின. கொங்கு நாட்டு வரலாறு, துளுவ நாட்டு வரலாறு, சேரன் செங்குட்டுவன், மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், மூன்றாம் நந்திவர்மன் முதலிய நூல்கள் அவர் நமக்கு வழங்கியுள்ள வரலாற்றுச் செல்வங்கள். அவருடைய 'களப்பிரர் காலத் தமிழகம்' என்னும் ஆய்வு நூல். இருண்ட காலம் என்று ஆய்வாளர்களால் வருணிக்கப்பட்ட களப்பிரர் காலத்திற்கு ஒளியூட்டி, வரலாற்றுத் தடத்தைச் செப்பனிட்டது.

நகராட்சிப் பள்ளி ஆசிரியராக நெடுங்காலம் பணியாற்றிய அவர் தன்னுணர்வால் உறுதியான உழைப்பால், தமிழ்ப்பற்றால் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் மதித்துப் போற்றும் பணிகளைச் செய்தார். ஆங்கிலம், மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தவர். அவருக்கு மதுரைப் பல்கலைக்கழகம் 1980 ஆம் ஆண்டு 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்னும் பட்டமளித்துப் பாராட்டியது. கிறித்தவமும் தமிழும், சமணமும் தமிழும், பௌத்தமும் தமிழும், மறைந்துபோன தமிழ்நூல்கள் போன்ற பல நூல்களால் தமிழ் ஆய்வு வரலாற்றில் மயிலை சீனி. வேங்கடசாமி அழியாச் சிறப்பிடம் பெற்றுள்ளார்.

Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

வினாக்கள்:

1. மறந்ததும் மறைந்ததும் - இது போன்ற இரண்டு தொடர்களை உருவாக்குக.
2. அழிந்த வரலாறு, புதிய வெளிச்சம் - அடிக்கோடிட்ட சொற்களின் எச்ச வகைகளை எழுதுக.
3. அழியாச் சிறப்பிடம் - இலக்கணக்குறிப்புத் தருக.
4. முதலிய, முதலான - பொருளறிந்து சொற்றொடர் அமைக்க.
5. பத்தியில் உள்ள உயர்வு சிறப்பு உம்மையைக் கண்டு எழுதுக.

43) பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றனுக்குக் கவிதை புனைக:
தாய்நாடு அல்லது மலையருவி

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் இருபக்கங்களுக்கு மிகாமல் விடை தருக: 3×6=18

44) அ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீவிர் அறிவன யாவை?

(அல்லது)

ஆ) இயற்கையைப் போற்றும் கவிதைகளாக ஆத்மாநாம் கவிதைகள் விளங்குவதை நிறுவுக.

45) அ) கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம் வழி நிறுவுக. (அல்லது)

ஆ) நடராசன் தனிமொழிகளிலிருந்து நீங்கள் அறியும் கருத்துகளை எழுதுக.

46) அ) தமிழர் வாழ்வோடும், புலம்பெயர் நிகழ்வோடும் அ. முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது?

(அல்லது)

ஆ) மதீனா நகரம் ஒரு வளமான நகரம் என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

## பகுதி - V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக: 4+2=6

47) அ) 'உண்டால் அம்ம .........' எனத் தொடங்கும் புறநானூற்று பாடலை எழுதுக.

ஆ) 'உணின்' என முடியும் குறட்பாவை எழுது.

----------

www.Padasalai.Net

SHOT ON MI 10T PRO

Scanned with CamScanner